பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 06 ஞாயிற்றுக்கிழமை 22.08.2021 கதிர் 154

## ஊரடங்குச் சட்டத்தை மீறிய 452 பேர் கைது!

நாட்டில் இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களுள் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 452 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கடந்த ஒக்டோபர் 2

## கொரோனாத் தாண்டவத்தில் 6 நாள்களுக்குள் 1,087 சாவுகள்

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் தாண்டவத்தில் 6 நாள்களில் 1,087 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியிலேயே குறித்த மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதன்படி 15ஆம் திகதி 167 பேரும், 16ஆம் திகதி 171 பேரும், 17ஆம் திகதி 170 பேரும், 18ஆம் திகதி 186 பேரும், 19ஆம் திகதி 195 பேரும், 20ஆம் திகதி 198 பேரும் உயிரிழந்துள்ளனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் கடந்த 20ஆம் திகதி வரை 7 ஆயிரத்து 183 பேர் மரணமடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தந்தையையும் மகனையும் சாகடித்த கொரோனா தொற்று

### இருவரும் முன்னாள் பிரபல விளையாட்டு வீரர்கள்



கொழும்பு றோயல் கல்லூரியின் முன்னாள் கிரிக்கெட் வீரரும் கல்லூரியின் கிரிக்கெட் கழக உறுப்பினருமான சுல்கி மொஹமட் மற்றும் அவரது தந்தையான மருதானை சாஹிரா கல்லூரியின் முன்னாள் பிரபல ரக்பி வீரர் இப்ராஹிம் ஹமீட் ஆகியோர் இரண்டு நாள்களுக்குள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

கொழும்பில் வசித்து வந்த சுல்கி மொஹமட் நேற்றும், அவரது தந்தை இப்ராஹிம் ஹமீட் நேற்றுமுன்தினமும் உயிரிழந்துள்ளனர். 2

# தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து தமக்குள் பேச்சு!

## முதல் கட்டமாக நான்கு விடயங்களில் ஒருமித்துச் செயலாற்றுவதற்கு முடிவு

**யாழ்ப்பாணம்,ஓகஸ்ட் 22**

**தமிழ் மக்களின் அரசியல் விடயங்களில் ஒருமித்த நிலைப்பாட்டில் செயல்படுவதற்காக தமிழ் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் மெய்நிகர் இணைய வழியின் ஊடாக சந்திப்பு ஒன்றை மேற்கொண்டனர்.** 2

## மருத்துவர் ஸ்ரீபவானந்தராஜாவை மிரட்டிய நபர் வசமாக மாட்டினார்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தேநீர்ச்சாலை கூறுவிலை கோரலை வழங்குமாறு வைத்தியசாலை பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜாவை தொலைபேசியில் மிரட்டிய நபர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டார்.

ஜனாதிபதி செயலக அதிகாரி எனத் தன்னை அறிமுகப்படுத்திய அந்த நபர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சிற்றுண்டிச்சாலையை நடத்துவதற்கான ஒப்பந்தத்தை தாம் முன்மொழிபவருக்கே வழங்கவேண்டும் என்று மிரட்டியுள்ளார்.

இந்தத் தொலைபேசி அழைப்பு கடந்த 16ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மருத்துவமனை பதில் பணிப்பாளருக்கு வந்துள்ளது. 2

## வவுனியாவில் மேலுமொருவர் தொற்றால் சாவு

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொற்றால் ஆண் ஒருவர் மரணமடைந்துள்ளார் என்று மாவட்ட சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு கொரோனா 2

## யாழ். நகரில் நடமாடியவர்களில் 7 பேருக்கு கொரோனா தொற்று

நாட்டில் கொரோனாத் தொற்று நிலை அதிகரித்துள்ள நிலையில் நாடு பூராகவும் பயணத்தடை அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாண நகர் பகுதியில் பயணத்தடை வேளையில் நடமாடியோருக்கு சுகாதாரப் பிரிவினரால் துரித அன்டிஜன் பரிசோதனை இன்று மேற்கொள்ளப்பட்டது. 2

## ஊரடங்கு வேளையில் விபத்தில் ஒருவர் சாவு

(ந.லோகதயாளன்)



கிளிநொச்சி ஏ - 9 வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த சம்பவம் கிளிநொச்சி 2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மருத்துவர்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் தொடர்பில் மருத்துவர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா, யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை வழங்கினார்.

அதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய, முதன்மை பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ, தொலைபேசி அழைப்பு எடுத்தவர் நீர்கொழும்பில் வசிப்பவர் எனக் கண்டறிந்தார்.

அவரைக் கைது செய்வதற்கான விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்த யாழ்ப்பாணம் பொலிஸார், பிடியாணை உத்தரவு ஒன்றையும் பெற்றனர்.

சந்தேகநபரின் இடத்துக்குச் சென்ற யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய, முதன்மைபொலிஸ்பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ தலைமையிலான பொலிஸ் குழுவினர் சந்தேகநபரைக் கைதுசெய்து யாழ்ப்பாணம் அழைத்து வந்தனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். தற்போது நாட்டில் நிலவும் கொரோனா பரவல் காரணமாக சந்தேகநபரை நிபந்தனையுடனான பிணையில் விடுவித்து வழக்கை ஒத்திவைத்தது.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சிற்றுண்டிச் சாலையை நடத்துவதற்காக கிடைக்கப்பெற்ற மூன்று விண்ணப்பங்களில் ஒன்று விண்ணப்பத்தின்போதும் ஏனையவை பரிசீலனையின்போதும் நிர்வாகத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்தநிலையிலேயே பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ். ஸ்ரீபவானந்தராஜாவுக்கு தொலைபேசி வழியாக மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மிரட்டியவர்கள் அரியாலை, புங்கங்குளம் முகவரியில் 70 வயது மூதாட்டியின் பெயரில் பினாமியாக விண்ணப்பித்தவருக்கு ஒப்பந்தத்தை வழங்குமாறு கோரியே ஆங்கில மொழியில் மிரட்டல் விடப்பட்டது. தற்போது தொலைபேசியில் மிரட்டியவர் அடையாளம் காணப்பட்டதால் குடாநட்டைச் சேர்ந்த சிலரும் விசாரணைக்குள் அகப்பட்டுள்ளனர்.

## ஊரடங்கு...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

155ஆம் கட்டைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து, வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த நபரை யாழ்ப்பாணத்துக்கு ஏற்றி வந்து கொண்டிருக்கும் வேளையில் கிளிநொச்சி 155ஆம் கட்டைப் பகுதியில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

கொழும்பு விமான நிலையத்தில் இருந்து அதிவேகத்தில் வந்த ஹயஸ் ரக வாகனம் வீதியால் சென்ற சைக்கிளைப் பாதுகாக்கும் நோக்கில் வேகத்தை குறைப்பதற்காக பிரேக் பிடித்தபோது கிளிநொச்சியில் பெய்கின்ற மழை காரணமாக, ஹயஸ் வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டை மீறி கொழும்பு திசையை நோக்கி திரும்பியதில், இரணைமடுச் சந்தியில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் உயிரிழந்துள்ளமையுடன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் வானின் சாரதி கிளிநொச்சி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வவுனியாவில்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சை விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி குறித்த ஆண் இன்று உயிரிழந்துள்ளார்.

வவுனியா, தோணிக்கல், சிவன் கோவில் வீதியைச் சேர்ந்த 68 வயதுடைய ஆணே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

அவரது உடலை சுகாதார நடைமுறை களைப் பின்பற்றி அடக்கம் செய்வதற்கான நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

(100)

## ஊரடங்குச்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கைதானவர்களின் மொத்த எண்ணிக்கை 56 ஆயிரத்து 294 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்குப் பிரவேசிக்கும், அங்கிருந்து வெளியேறும் 13 இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சோதனைச்சாவடிகளில் 639 வாகனங்களும், 1, 128 நபர்களும் நேற்று சோதனைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தந்தையும்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1991 - 1992 காலப்பகுதியில் சுல்கி மொஹமட் கொழும்பு றோயல் கல்லூரியின் கிரிக்கெட் அணியில் விளையாடியிருந்த பிரபல வீரராவார். இவர் ஒரு விக்கெட் காப்பாளரும், சிறந்த துடுப்பாட்ட வீரரும் ஆவார்.

சுல்கியின் தந்தை இப்ராஹிம் ஹமீட் மருதானை சாஹிரா கல்லூரியின் பிரபல ரக்பி வீரராவார். 1971ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொலிஸ் ரக்பி அணிக்குத் தலைமை வகித்தவர். இவர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக தனது பணியை நிறைவு செய்துள்ளார். இவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முன்னாள் ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்தனவின் பிரதான பாதுகாப்பு அதிகாரியாகவும் செயற்பட்டார்.

தந்தையும் மகனும் சமீபத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தனர்.

ஒரு வாரமாக வைத்தியசாலையில் இருந்து சுல்கி மொஹமட் கடந்த 19ஆம் திகதி வீடு திரும்பியிருந்த நிலையில், நேற்று சனிக்கிழமை காலை மீண்டும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார். சுல்கியின் தந்தை இப்ராஹிம் ஹமீட் கடந்த நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ், மத்திய பஸ் நிலையத்துக்கு முன்னால் வீதியில் பயணிப்போர் வழிமறிக்கப்பட்டு பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

70 இற்கும் மேற்பட்டோருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 7 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.



## தமிழ்க்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏறத்தாழ மூன்றரை மணி நேரம் இந்தக் கலந்துரையாடல் சுமுகமாக இடம்பெற்றது.

இச்சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன. எம்.பி., தமிழ் மக்கள் கூட்டணியின் சி.வீ.விக்னேஸ்வரன் எம்.பி., ரெலொவின் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., கோவிந்தன் கருணாகரம் எம்.பி., குருசுவாமி சுரேந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் என். ஸ்ரீகாந்தா, ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புளொட் தலைவர் சித்தார்த்தன் இதில் கலந்து கொள்வார் எனக் கூறப்பட்டது. எனினும் மெய்நிகர் உரையாடல் இணைப்பு ஏற்பாடு சீரமைக்கப்படுவதில் சிக்கல் நேர்ந்தமையால் அவர் பங்குபற்ற முடியாமல் போனதாக ஒரு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்தச்சந்திப்புத் தொடர்பாக ரெலோ ஏற்பாட்டாளரும் அக்கட்சியின் பேச்சாளருமான குருசுவாமி சுரேந்திரன் தெரிவித்தவை வருமாறு:-

ஒருமித்தநிலைப்பாட்டில்செயலாற்றக் கூடிய விடயங்கள், எதிர்வரும் ஐ.நா. மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடர் மற்றும் தமிழ் தரப்பினரோடு அரசாங்கம் முயற்சிக்கும் பேச்சுவார்த்தை ஆகியவை முக்கிய விடயங்களாக கருத்தில் கொள்ளப்பட்டன.

ஏற்கனவே தமிழ்க் கட்சிகள் சந்தித்த கூட்டங்களில் ஒருமித்த நிலைப்பாட்டில் செயலாற்றக் கூடிய விடயங்களை அடையாளப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பட்டியலிடப்பட்ட விடயங்களில் மிக முக்கியமாக, முதல் கட்டமாக ஒருமித்த நிலைப்பாட்டில் இணக்கம் காணப்படுவதற்கு நான்கு விடயங்கள் அடையாளப்படுத்தப்பட்டன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான கோரிக்கை, அரசியல் கைதிகள் விடுதலை, தாயகப் பரப்பில் நடைபெறும் திட்டமிட்ட காணி அபகரிப்பு நடவடிக்கைகளை நிறுத்துதல் மற்றும் அரசியல் யாப்பில் உள்ள 13 ஆவது திருத்தச்சட்டத்தை முற்றாக நடைமுறைப் படுத்த அரசையும் இந்தியாவையும் கோருதல் என்பவையாகும்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை எம்முடைய தீர்வாக ஏற்க முடியாது. ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்பது சாத்தியமில்லை என்பது அனைவருடைய நிலைப்பாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இருப்பினும் அரசியல் யாப்பில் இருக்கக்கூடிய 13ஐ நிறைவேற்ற அரசு முன்வருவது நல்லிணக்க நடவடிக்கையாகக் கருத முடியும் என தீர்மானிக்கப் பட்டது.

இந்த விடயங்களில் காத்திரமாக ஒருமித்து செயலாற்றுவதென தீர்மானிக் கப்பட்டது. அதேவேளை மற்ற விடயங்களையும் கட்டம் கட்டமாக ஒருமித்து எதிர்காலத்தில் முன்னெடுக்கவும் இணக்கம் காணப்பட்டது.

அரசியல் தீர்வு சம்பந்தமாக அரசுடனான பேச்சுவார்த்தை நடத்துவது அவசியம். ஆயினும் அது தமிழ் மக்களின் நலன்களுக்காக அமைய வேண்டும் என்பதிலும் சர்வதேச அழுத்தங்களில் இருந்து அரசு தப்பிக்க இடமளிக்க கூடாது என்பதிலும் நாம் உறுதியாக இருக்க வேண்டும் என முடிவு எட்டப்பட்டது. போருக்கு முன்னும் பின்னும் அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் முகம் கொடுத்திருக்கும் பல பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வருவது அவசியமாகும். இது பேச்சுக்கான ஒரு நல்லிணக்க நடவடிக்கையாக அமைவதோடு சாதகமான சூழலையும் ஏற்படுத்தும். ஆகவே சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் தமிழ்க் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டில், மேல் குறிப்பிட்ட இணக்கம் காணப்பட்ட விடயங்கள் உட்பட மற்றும் பல விடயங்களையும் உள்ளடக்கிய கோரிக்கையை முன்வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

வரவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் 46/1 பிரேரணை சம்பந்தமாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் வாய்மூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட இருக்கிறது. இதன் பொருட்டு தமிழ்த் தரப்பினால் ஒருமித்து அறிக்கை ஒன்று தயாரித்து சமர்ப்பிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

அதில், 46/1 பிரேரணையில் உள்ள விடயங்களை அரசு நிறைவேற்றாமலும் அதேவேளை அவற்றிற்கு எதிராகவும் செயற்படுவதை சுட்டிக்காட்டியும், குறிப்பாக பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னர் அரசினால் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளின் விவரங்களையும் உள்ளடக்குவது என்று இணக்கம் காணப்பட்டது.

மூன்றரை மணி நேரம் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடல் மிக ஆரோக்கியமான முறையில் நடைபெற்றதோடு மீண்டும் விரைந்து சந்திப்பதற்கான ஒத்திசைவுடன் பிற்பகல் இரண்டு முப்பது மணிக்கு நிறைவு பெற்றது. - என்றார்.


வேலைவாய்ப்பு
சமையலுக்கு பெண் உதவியாளர் தேவை.
தொடர்புகளுக்கு -
076 740 3814

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# கையை மீறும் பொருளாதாரம்

**தவறான பொருளாதாரக் கொள்கைகள், பிழையான அரசியல் நகர்வுகள், மோசமான இராஜதந்திரக் கையாள்கைகள், கையை மீறி இடம்பெறும் பேரிடர்கள் போன்ற இன்னோரன்ன காரணங்களினால் நாட்டின் பொருளாதாரம் சிதறுண்டு போகப் போகின்றது, அதன் விளைவாக நாடு பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளப் போகின்றது என்றெல்லாம் எதிர்வு கூறல்கள் வெளிப்படுத்தப்பட்டு வந்தன.**

**அந்த மோச நிலைமை நாட்டின் வாசல்படி வரை வந்துவிட்டது என்கின்றனர் பொருளாதார விவகார அவதானிகள்.**

**நாட்டின் பொருளாதாரம் அரசின் கையை –கட்டுப்பாட்டை – மீறிவிட்டது என்பது வெளிப்படையாக துலாம்பரமாகி வருகின்றமையை அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.**

**பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்து, நிலைமையைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று வெளியில் கூறப்பட்டாலும், இது விடயத்தில் அரசு எடுக்கும் முடிவுகளும் தீர்மானங்களும் வெறும் ஏட்டு சுரக்காய்கள்தான், அவற்றை செயல்படுத்த முடியாத நிலையில் அவை அரசின் கட்டுப்பாட்டை மீறிச் சென்று விட்டன என்ற யதார்த்தத்தையும் அவர்கள் சுட்டுகின்றனர்.**

**"நாட்டின் பொருளாதாரக் கொள்கைப் போக்கைத் தீர்மானிப்பவர்கள் அரசின் கொள்கை வகுப்பாளர்கள் அல்லர் என்ற நிலைமை இப்போது ஏற்பட்டுள்ளது. நான்கு சுவருக்குள் – அறைக்குள் – இருந்தபடி அவர்கள் வகுக்கும் கொள்கைகள் ஏதும் இப்போது நடைமுறைப்படுத்தப்படுவன அல்ல, மாறாக, வீதிகளில்தான் நாட்டின் பொருளாதாரம் தீர்மானிக்கப்படுகின்றது." –இப்படி பொருளாதார விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.**

**நாட்டின் நாணய மாற்றுக் கொள்கைகள் தொடர்பாக மத்திய வங்கி முன்னெடுக்கும் தீர்மானங்களை தூக்கிக் கடாசிவிட்டுத் தம்பாட்டில், தமது முடிவுகளுக்கு ஏற்ப, உள்ளூர் வங்கிகள் பல செயற்படத் தொடங்கியிருக்கின்றன. இது, நாட்டின் பொருளாதார செல்நெறி அரசின் கொள்கை வகுப்பாளர்களுடைய கையை – கட்டுப்பாட்டை – மீறி விட்டது என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு என அவர்கள் சுட்டுகின்றனர்.**

**தன்னுடைய நிதித் தேவைகளுக்காகக் கண்ணை மூடிக் கொண்டு ரூபா நோட்டுகளை அச்சிட்டுத் தள்ளிப் புழக்கத்துக்கு விட்டுக் கொண்டிருக்கின்றது கோட்டாபய அரசு. அதன் காரணமாக ரூபாவின் பெறுமதி மோசமாக வீழ்ந்து செல்கின்றது. விலைவாசி ஏற்றம், பணவீக்கம் என்று எல்லாமே எகிறி வருகின்றன.**

**ரூபாவின் பெறுமதிச் சரிவை சமாளிப்பதற்காக, டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதியை ஒரு கற்பனை நிலையில் [விலையில்] – ஏட்டில் – பேண விரும்புகின்றது மத்திய வங்கி. டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியை சராசரியாக 200 ரூபாவை ஒட்டி வைத்திருப்பது போல பாவனை காட்டுகின்றது அது. ஆனால் அந்த விலைக்கு பொருளை வாங்குவதற்கும் விற்பதற்கும் அரசிடமோ, மத்திய வங்கி இடமோ அந்நிய செலவாணிக் கையிருப்பு இல்லை.**

**இதனால் உள்ளூர் வங்கிகள் தங்கள் ஊடாகச் செய்து கொள்ளப்பட்ட கடன் வழங்கு கடிதங்களுக்குரிய [**Letters of Credit**] கொடுப்பனவுகளை வெளிநாட்டு வங்கிகளுக்கு செலுத்த முடியாது திணறுகின்றன. தேவையான வெளிநாட்டு நாணயத்தை டொலரை– தான் குறிப்பிட்ட விலையில் வழங்க முடியாத கையறு நிலையில் மத்திய வங்கி இருப்பதால், சம்பந்தப்பட்ட உள்ளூர் வங்கிகள் வெளிநாட்டு நாணயமாற்று வீதம் தொடர்பாக இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள அறிவித்தல்களை வெறும் ஏட்டுச் சுரைக்காயாகக் கருதிப் புறம் ஒதுக்கி விட்டுத் தம்பாட்டில் புதிய விலையில் வெளிநாட்டு நாணயங்களை வாங்கி – விற்கும் வேலையை ஆரம்பித்துள்ளன. இது விடயத்தில் கையாலாகாத இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல்களைக் குப்பையில் தூக்கி வீசி விட்டு, அந்த வங்கிகள் தனியார் நிறுவனங்கள் போல, வெளிநாட்டு நாணயங்களுக்கு தம்பாட்டில் சந்தையின் உண்மையான தேவை, மதிப்புக்கு அமைய பெறுமதி தீர்மானித்து, அவற்றின் அடிப்படையில் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்க தொடங்கியுள்ளன.**

**அதாவது வெளிநாட்டு நாணயங்களுக்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானிக்கும் பெறுமதி – செயற்கையாக, வல்வந்தமாக முடிவுசெய்யும் மதிப்பு – இனியும் நின்று பிடிக்காது. சந்தைத் தேவை, பாவனை, கேள்வி ஆகியவற்றிற்கேற்ப அது தன்பாட்டில் கூடிக்கொண்டே செல்லும். இது விடயத்தில் மத்திய வங்கி இனி விட்டத்தைப் பார்த்து கொண்டிருக்க வேண்டியதுதான்**

# முடக்க நிலையை நீடிப்பதானது பொருளாதாரத்தைப் பாதிக்கும்!

## அஜித் நிவாட் கப்ரால்



முடக்கநிலை நீடிப்பானது பொருளாதாரத்தை பாதிக்கும் என இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (சனிக்கிழமை) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

நாடு முடக்கப்படும் கால எல்லையை முடிந்தளவு குறைக்காவிட்டால் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும்.

நாடு முடக்கப்பட்டுள்ளதால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை சீர் செய்ய வேண்டுமாயின் நாட்டைக் கூடிய சீக்கிரம் பழைய நிலைக்குக் கொண்டு வர வேண்டும். எமக்கு தெரியும் வாழ்க்கை மிகவும் முக்கியமானது. அதேபோன்று வாழ்வாதாரமும் முக்கியமானது.

வாழ்வாதாரம் இல்லாமல் போவதால் ஏற்படக் கூடிய வேதனைகள் அதனை இழந்தவர்களுக்கே தெரியும். முடிந்தளவு முடக்க நிலையை வரையறுத்துக் கொள்ள வேண்டும்.

வெளிநாடுகளுடன் வர்த்தகம் செய்ய வேண்டுமாயின் டொலர் தேவை. அதற்காக நாம் டொலர்களை சம்பாதிக்க வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் சில தீர்மானங்கள் எடுக்க நேரிட்டது. அதன் ஒரு கட்டமாகவே வாகன இறக்குமதி இடைநிறுத்தப்பட்டது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# அரசாங்க ஊழியர்களினது சம்பளம் குறைக்கப்படாது

## வர்த்தக அமைச்சர் பந்துல உத்தரவாதம்



அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள் குறைக்கப்படாது என வர்த்தக விவகார அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (சனிக்கிழமை) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

விரும்பியோ விரும்பாமலோ நாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதி செய்ய நேரிடுகின்றது.

அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தில் அரைவாசியை குறைக்க எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

எவ்வாறெனினும் நாடு அடைந்துள்ள பொருளாதாரப் பின்னடைவிலிருந்து மீள்வதற்கு மக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது.

நாட்டின் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தக நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடிய எந்தவொரு செயலையும் செய்ய வேண்டாம் என நான் மக்களிடம் மன்றாடிக் கேட்கின்றேன் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

# தலிபான்களின் உறுதிமொழி குறித்து மகிழ்ச்சி வெளியிட்டுள்ளது இலங்கை

ஆப்கானிஸ்தானின் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள தலிபான்களின் உறுதிமொழிகள் குறித்து மகிழ்ச்சி அடைவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் பெண்கள் பணிகளில் ஈடுபட முடியும் எனவும், பெண் பிள்ளைகள் பாடசாலைகள் செல்ல முடியும் எனவும் தலிபான்கள் உறுதிமொழி வழங்கியமை மகிழ்ச்சி அளிக்கின்றது என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுமன்னிப்பு அறிவிப்பு மற்றும் வெளிநாட்டவர்களைத் துன்புறுத்துவதில்லை என அளிக்கப்பட்ட உறுதிமொழிகளை வரவேற்பதாகத் தெரிவித்துள்ளது. ஆப்கானிஸ்தானின் தற்போதைய நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாக குறிப்பிட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் தங்கியுள்ள இலங்கையர்களின் பாதுகாப்புத் தொடர்பாக இலங்கை முதன்மையான கரிசனையை கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

## ஊரடங்கு நேரத்தில்

# சில வங்கிக் கிளைகள் திறப்பதற்கு அனுமதி

தற்போது தனிமைப் படுத்தல் ஊரடங்கு உத்தரவு நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் நாடு முழுவதிலும் உரிமம் பெற்ற அனைத்து வங்கிகளினதும் தெரிவு செய்யப்பட்ட சில கிளைகளைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் நலன் கருதி இந்த விடயத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வங்கிகள் மட்டுப்படுத்தப்பட்ட நிதி பரிவர்த்தனைக்கு ஊரடங்கு உத்தரவின் போது அனுமதி வழங்கப்படுவதாக சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 6 கிராம உத்தியோகத்தர்களுக்கு

# கம்பஹா மாவட்டத்தில் கொவிட்

கம்பஹா மாவட்டத்தின், நிட்டம்புவ பிரதேசத்தில் கிராம உத்தியோகத்தர்கள் 6 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அத்தனகல்ல பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. கரஸ்னாகல, ரத்பொகுனகம, கத்தொட்ட மற்றும் தீனாபமுனுவ கிழக்கு பகுதி ஆகிய பிரிவுகளில் பணியாற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கே கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானவர்களும், அவர்களது குடும்பத்தினரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# இந்தோனேஷியாவில் ஒரேநாளில் 1,361 பேர் கொவிட்டால் உயிரிழப்பு



உலக நாடுகளில் கொரோனா பாதிப்பு மொத்தம் 21,21,03,181 ஆக உள்ளது. உலகம் முழுவதும் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 44,35,512 ஆக உள்ளது.

உலக நாடுகளில் கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்கள் எண்ணிக்கை 18,97,33,602 ஆக உள்ளது.

உலக அளவில் மொத்த கொரோனா பாதிப்பில் முதல் இடத்தில் அமெரிக்கா உள்ளது. எனினும், உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது, இந்தோனேஷியாவில் அதிக அளவாக ஒருநாள் கொரோனா உயிரிழப்புகள் பதிவாகி உள்ளன.

இந்தோனேஷியாவில் நேற்று மட்டும் ஒரே நாளில் 1,361 பேர் கொரோனாவால் உயிரிழந்து உள்ளனர். அதற்கு அடுத்து ரஷ்யாவில் 797 பேர் கொரோனாவால் உயிரிழந்து உள்ளனர். இதற்கடுத்து, 3 ஆவது இடத்தில் மெக்சிக்கோ (761 பேர்) உள்ளது. இதனைத் தொடர்ந்து, பிரேசிலில் - 585, ஈரான் - 544, அமெரிக்கா - 515, பிலிப்பைன்ஸ் - 398 ஆகியவை உள்ளன.



## தலிபான்கள் தாக்கினால் தக்க பதிலடி கொடுக்கப்படும்

ஆப்கானிஸ்தான் தலிபான்கள் வசம் வந்துள்ளது. தலிபான்கள் கடுமையான சட்ட திட்டங்களை அமுல்படுத்தக்கூடும் என்பதால் அங்கிருந்து ஏராளமான மக்கள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். இந்த நிலையில், அமெரிக்க அதிபர் ஜோ பைடன் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளிக்கையில் கூறியதாவது:-

தலிபான்களால் பாதிக்கப்படக் கூடியவர்களை ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேற்றும் பணியில் ஈடுபட்டுள்ள தங்கள் நாட்டு வீரர்களை அந்த அமைப்பினர் தாக்கினால், அதற்கு பலத்த பதிலடி கொடுக்கப்படும்

அவர்கள் மீது தலிபான்கள் தாக்குதல் நடத்தினாலோ, அமெரிக்க வீரர்களின் பணிகளுக்கு இடையூறு விளைவித்தாலோ அதற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்றார்.

## ஆப்கானிஸ்தான் நெருக்கடிக்கு மத்தியில் ஆசிய நாடுகளில் கமலா ஹாரிஸ் சுற்றுப்பயணம்



ஆப்கானிஸ்தானில் ஆட்சி அதிகாரம் தலிபான்கள் வசம் சென்றுள்ளது. இதனால், அங்கு ஒருவித அசாதாரண சூழல் நிலவி வருகிறது. ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் தங்கள் நாட்டு மக்களை சிறப்பு விமானங்கள் மூலம் வெளியேற்றி வருகின்றன.

ஆப்கானிஸ்தான் நெருக்கடிக்கு மத்தியில், சிங்கப்பூர், வியட்நாம் போன்ற ஆசிய நாடுகளுக்கு கமலா ஹாரிஸ் பயணம் மேற்கொண்டுள்ளார்.

சிங்கப்பூருக்கு இன்று காலை சென்றுள்ள கமலா ஹாரிஸ், நாட்டின் முக்கிய தலைவர்களை நாளை சந்திக்கவுள்ளார். ஆப்கானிஸ்தான் பிரச்சினைக்கு முன்னரே கமலா ஹாரிஸின் இந்த சுற்றுப்பயணம் திட்டமிடப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் விளக்கமளித்துள்ளனர்.

## மெக்சிக்கோவில் சூறாவளி 8 பேர் சாவு; 3 பேர் மாயம்

மெக்சிக்கோ நாட்டின் கிழக்குப் பகுதியில் கிரேஸ் சூறாவளி பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. இந்தப் பருவத்தின் 2ஆவது அட்லாண்டிக் சூறாவளியான கிரேஸ் நேற்று காலை கரையைக் கடந்தது.



இதனால், மணிக்கு 205 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசியது.


வெராகுரூஸ் பகுதியில் 20இற்கும் மேற்பட்ட நகராட்சி பகுதிகளில் கடுமையான வெள்ளம் ஏற்பட்டது.

இந்த சூறாவளி பாதிப்புக்கு 8 பேர் உயிரிழந்து உள்ளனர்.

3 பேர் வரை காணாமல் போயுள்ளனர். வீடுகள் மற்றும் சாலைகள் பல சேதமடைந்து உள்ளன. ஒரு சில பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டும் உள்ளது. இதனைத் தொடர்ந்து பொலிஸார் மற்றும் மெக்சிக்கோ இராணுவம் ஆகியவை மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

## ஜப்பானில் நிலநடுக்கம்

ஜப்பான் புகுஷிமா பகுதியில் உள்ளூர் நேரப்படி இன்று காலை 11.21 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. 60 கி.மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.2 ஆகப் பதிவாகியுள்ளது. புகுஷிமாவின் நான்கு இடங்களில் நிலஅதிர்வு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை விடப்படவில்லை.



## மலேசியா பிரதமராக இஸ்மாயில் சப்ரி



முகைதின் யாசின் தலைமையிலான அரசில் துணை பிரதமராக இருந்து வந்த இஸ்மாயில் சப்ரி யாகூப், ஆட்சி அமைப்பதற்கு தேவையான 114 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தனக்கு இருப்பதாக நேற்று முன்தினம் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து மன்னர் சுல்தான் அப்துல்லா சுல்தான் அகமது ஷா, 61 வயதான இஸ்மாயில் சப்ரியை பிரதமராக நியமித்தார்.

இந்த நிலையில் நேற்று தலைநகர் கோலாலம்பூரில் உள்ள அரண்மனையில் மன்னரின் முன்னிலையில் இஸ்மாயில் சப்ரி மலேசியாவின் புதிய பிரதமராக பதவியேற்றுக் கொண்டார். இஸ்மாயில் சப்ரி முகைதின் யாசின் தலைமையிலான அரசில் இராணுவ மந்திரியாக பதவி வகித்துள்ளார் என்பதும், அவர் ஐக்கிய மலாய் தேசியக் கட்சியின் துணை தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் 1957ஆம் ஆண்டு மலேசியா சுதந்திரம் பெற்றதிலிருந்து 60 ஆண்டுகளுக்கும் மேலாக நாட்டை ஆண்டுவந்த ஐக்கிய மலாய் தேசிய கட்சியைச் சேர்ந்த ஒருவர், மீண்டும் பிரதமராகி உள்ளார்.

INDIVIDUAL ENGLISH CLASSES
K. GANESH (BA. Pera)
இலகுவாக கதைக்கும் ஆங்கில வசன அமைப்பு முறை. Tenses, Active and Passive, Direct and Reported Speech
Grade 7 - GCE O/L - A/L
பட்டதாரிகள், தொழில் செய்வோர் அனைவரும்
077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்

இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

Study in UK
• Minimum Requirement : GCE O/L (London or Local)
• IELTS minimum 4.0 average preferred
• Can apply without IELTS too
• Foundation / Diploma / Bachelors / Masters Programs
• Easy Visa Procedure / 28 days Bank Balance only required.
• Choice of Many Universities – Inner and Outer London
• Part time work during term time / Full time work during holidays.
SIC Scholars Information Center
No. 527-1/1, First Floor, Galle Road, Wellawatte, Colombo 06.
Call : 0763 944 378

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழகத்தில் தளர்வுகளுடன் ஊரடங்கு நீடிக்கப்பட்டது திரையரங்கு, கடற்கரை, பாடசாலைகளுக்கு அனுமதி



தமிழகத்தில் தளர்வுகளுடன் கூடிய கொரோனா ஊரடங்கு மேலும் 2 வாரங்களுக்கு நீடிக்கப்படுவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

கடந்த முறை ஊரடங்கு நீடிப்பில் தளர்வுகள் எதுவும் வழங்கப்படாத நிலையில் தற்போது கொரோனாத் தொற்றுசற்றுக்குறையத்தொடங்கியதை அடுத்து சில தளர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

செப்டெம்பர் முதலாம் திகதி முதல் 9 முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சுழற்சி முறையில் பாடசாலைகள் திறக்கப்படும்எனதமிழகஅரசுஅறிவித்திருக்கிறது. டிப்ளோமா உள்ளிட்ட அனைத்துப் பட்டயப்படிப்பு வகுப்புகளையும் சுழற்சி முறையில் நடத்தவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நீச்சல் குளங்கள் மற்றும் விளையாட்டுப் பயிற்சிகளுக்கு பயிற்சியாளர்களுடன் 50% ஆள்களோடு இயங்கவும், 50% பார்வையாளர்களுடன் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி திரையரங்குகளை ஓகஸ்ட் 23 ஆம் திகதி முதல் இயக்கவும் அனுமதிக்கப்படவுள்ளது.


ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களுக்கு பொதுப் பேருந்து போக்குவரத்துக்கும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், மகளிர் மேம்பாட்டுக் கழகங்கள் மூலம் நடத்தப்படும் வேலைவாய்ப்புப் பயிற்சிகளுக்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

தங்கும் விடுதிகள் மற்றும் கேளிக்கை விடுதிகளில் உள்ள மதுக்கூடங்கள் செயல்படவும் அரசு அனுமதித்திருக்கிறது. கடற்கரைகளில் பொதுமக்கள் அனுமதிக்கப்படவுள்ளதோடு, கடற்கரைகளில் அமைந்துள்ள கடைகளின் பணியாளர்களும், சிறுவியாபாரிகளும் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பம், சேவை நிறுவனங்கள்100%பணியாளர்களுடன் செயல்படவும், உயிரியல், தாவரவியல் மற்றும் படகு இல்லங்கள் முறையான வழிகாட்டு நெறிமுறைகளுடன் இயங்கவும் அனுமதிக்கப்படுகின்றன.

இரவு 9 மணிவரை செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ள கடைகள் இனி 10 மணிவரை இயங்கலாம் என்றும், நிலையான வழிகாட்டு நெறிமுறைகளைப்பின்பற்றி மழலையர்காப்பகங்கள் செயல்பட அனுமதிக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## செப்டெம்பர் முதலாம் திகதி பாடசாலைகள் திறக்கப்படும்



தமிழகத்தில் கொரோனாப் பாதிப்புகளை முன்னிட்டு அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் என அனைத்துக் கல்விநிறுவனங்களும் மூடப்பட்டன. கொரோனாப்பாதிப்புகள்குறைந்துள்ளசூழலில்ஊரடங்கு தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, வரும் செப்டெம்பர் முதலாம் திகதி பாடசாலைகள் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டன.

இந்தநிலையில், பாடசாலைகள் திறப்பு குறித்து பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திருச்சியில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்துள்ளார். அவர் பேசும்போது, வரும் செப்டெம்பர் முதலாம் திகதி 9, 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பாடசாலைகளைத் திறப்பதில் அரசு உறுதியாக உள்ளது. வகுப்புகளை பாதுகாப்பாக நடத்துவதற்கு நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கியிருக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

இதன்படி, வகுப்பில் மாணவர்கள் சமூக இடைவெளி விட்டு அமர்வது, முகக்கவசம் அணிவது, 50 சதவீத மாணவர்கள் மட்டுமே சுழற்சி முறையில் பாடசாலைக்கு வருவது, அவர்களுக்குத் தேவையான கிருமி நாசினிகள் வழங்கப்படுவது, பாடசாலைகள் தயார் நிலையில் இருப்பது, ஆசிரியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசிகள் வழங்கப்படுவது என்பன உள்ளிட்ட பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகள் அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளன.



## காபூலில் இருந்து இந்தியா திரும்பிய விமானம் பயணிகளுக்கு கொரோனாப் பரிசோதனை

ஆப்கானிஸ்தானின் காபூல் நகரில் இருந்து நாடு திரும்பிய விமானப் பயணிகளுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் ஆட்சியை தலிபான்கள் கைப்பற்றிய பின்னர் அமெரிக்கா, இந்தியா, இங்கிலாந்து உள்ளிட்ட பல்வேறு நாடுகள் அங்கே தங்கியிருந்த தங்களுடைய நாட்டவரை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. ஆப்கானிஸ்தானில் இருந்து ஓகஸ்ட் 14 ஆம் திகதி முதல் இதுவரை 13 ஆயிரம் பேரை அமெரிக்க அரசு அழைத்துக்கொண்டுள்ளது.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தானின் காபூல் நகரில் இருந்து இந்திய விமானப் படையைச் சேர்ந்த சி-17 ரக விமானம் 107 இந்தியர்கள் உள்ளிட்ட 168 பயணிகளுடன் புறப்பட்டு, இன்று காலை காசியாபாத் நகரில் உள்ள ஹிண்டன் இந்திய விமானப் படைத் தளத்தில் வந்திறங்கியுள்ளது.

இதனை இந்திய மத்திய வெளிவிவகார அமைச்சகத்தின் செய்தித் தொடர்பு அதிகாரி அரிந்தம் பக்சி உறுதிப்படுத்தியிருக்கிறார்.

அவ்வாறு இந்தியாவுக்கு வந்த பயணிகளுக்கு கொரோனா பாதிப்புக்கான ஆர்.டி.-பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தலிபான்களுக்கு ஆதரவாக சமூக வலைத்தளங்களில் பதிவிட்ட 14 பேர் அசாமில் கைதுசெய்யப்பட்டனர்



ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

இதனால், கடந்த சில வாரங்களாக தலிபான்கள் குறித்த பேச்சும் விவாதமும் சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. சமூக வலைத்தளங்களில் தலிபான்கள் குறித்த செய்திகளும் கருத்துக்களும் அதிகம் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், தலிபான்களுக்கு ஆதரவு தெரிவித்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்ட 14 பேர் அசாமில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அசாம் மாநில பொலிஸ் டி.ஜி.பி., சமூக வலைத்தளங்களில் மக்கள் பதிவுகளை வெளியிடும் போதும் பகிரும்போதும் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தலிபான்கள் அமைப்பு பயங்கரவாத இயக்கமாகக் கருதப்படுவதால் அந்த அமைப்பு தொடர்புடையவர்களின் பேஸ்புக், வட்ஸ் அப் கணக்குகளுக்கு பேஸ்புக் தடை விதித்தது கவனிக்கத்தக்கது.

## ஆப்கான் தலிபான்களின் செயற்பாட்டைச் சுட்டிக்காட்டி இந்திய அரசை எச்சரித்த காஷ்மீரின் முன்னாள் முதல்வர்



ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் செயல்பாட்டோடு காஷ்மீர் முன்னாள் முதல்வர் மெஹ்பூபா முப்தி ஒப்பிட்டு பேசியமை பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகளின் வெளியேற்றத்துக்குப் பின்னர் தலிபான்கள் சில நாள்களிலேயே ஒட்டுமொத்த ஆப்கானிஸ்தானையும் கைப்பற்றி உலக அரங்கை அதிரச் செய்திருக்கின்றனர். அங்கு போர் நிறைவுக்கு வந்தபோதிலும் பதற்றம் குறைந்தபாடில்லை. கடந்த சில நாள்களாக உலகம் முழுதுமே தலிபான்கள் குறித்த விடயங்கள்தான் அதிகமாகப் பேசப்பட்டுவருகின்றன.

இந்த நிலையில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் முன்னாள் முதல்வரும், மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான மெஹபூபா முப்தி, தலிபான்கள் குறித்துப் பேசி இந்திய மத்திய அரசையும் எச்சரித்திருக்கிறார்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் நிதி முறைகேடு விவகாரத்தில் மெஹபூபா முப்தியின் தாயார் குல்ன் நசீர் அமுலாக்கத்துறை அலுவலகத்தில் நேரில் ஆஜராகி விளக்கம் அளித்தார்.

இது குறித்து செய்தியாளர்களின் கேள்விகளுக்கு மெஹ்பூபா முப்தி பதிலளிக்கும்போது, ஆப்கானிஸ்தானிலிருந்து வலிமைமிக்க அமெரிக்கா மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக்கொண்டு வெளியேறியது எப்படி எனப் பாருங்கள். உங்களுக்கு வாய்ப்பு இருக்கும் போதே உங்கள் வழிமுறையை மாற்றப் பாருங்கள். எங்கள் பொறுமையைச் சோதிக்காதீர்கள். வாஜ்பாய் எப்படி அமைதியாகப் பேச்சு நடத்தினார் என யோசித்துப் பாருங்கள்.

பேச்சு மீண்டும் ஆரம்பித்து, காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து ரத்து நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து மீண்டும் அதைத் திருப்பிக் கொடுங்கள். எங்களிடம் இருந்து எதைக் களவாடினீர்களோ அதை மீண்டும் திருப்பியளியுங்கள் என்று தெரிவித்திருக்கிறார். அத்தோடு, அப்கானிஸ்தான் நாட்டின் தன்னாட்சி நிறுவனங்களும் அமுலாக்கத்துறை, தேசிய புலனாய்வு முகமை, ஊடகங்கள் போன்றனவும் தலிபான் மயமாகிவிட்டதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

# ஊரடங்கை மீறிச் செயற்படுவோருக்கு பொலிஸார் கடுமையான எச்சரிக்கை

நாடளாவிய ரீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10 மணி முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரையிலான 10 நாள்கள் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அத்தியாவசிய சேவைகள் மாத்திரம் இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள அதேவேளை பொது மக்களை வீட்டிலேயே இருக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் கடுமையான அறிவுறுத்தல்களின் அடிப்படையில் மக்கள் வீட்டிற்குள்ளேயே முடங்கியதால் நாட்டின் பல பகுதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன .கொவிட் தொற்று அதிகரித்து வரும் நிலையில் அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் காரணமாக வாழைச்சேனை, ஓட்டமாவடி, வாகரை, கிரான் ஆகிய பிரதேசங்கள் முடங்கிக் காணப்படுகின்றன.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் உள்ள காலப்பகுதியில் மருந்தகங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் அத்தியாவசிய சேவைகள், விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து நடவடிக்கைகளும் முடங்கி காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை, தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தினை மீறிய வகையில் வீதிகளில் செயற்படுவோரைக் கண்டறியும் வகையில் வாழைச்சேனை பொலிஸாரினால் நேற்றுமுன்தினம் முதல் பிரதான வீதிகளில் விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமையுடன், தனிமைப்படுத்தல் ஊரடங்கை மீறிச் செயற்பட முற்பட்ட சிலர் பொலிஸாரால் கடுமையாக எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.




வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள அனைத்து வீதிகளிலும் பொலிஸார் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தினை மீறுவோரைக் கண்டறியும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# நாவலடி பகுதியில் குண்டொன்று மீட்பு

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவலடி கடற்கரைப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் கைக்குண்டொன்று நேற்று சனிக்கிழமை மாலை 4 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

நாவலடி கடற்கரைக்கு அண்மித்த சவுக்குக் காட்டுப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் கைக்குண்டொன்று நேற்று சனிக்கிழமை மாலை 4 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது. இராணுவத்தினரிற்கு கிடைத்த தகவலையடுத்தே கைக்குண்டு மீட்டுள்ளமையுதுடன், இராணுவத்தினர் குறித்த இடத்தில் பாதுகாப்புக் கடமைகளுக்காகவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

# 10 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியில் போதைப்பொருள்களுடன் மூன்று பேர் கைது

திருகோணமலை, குச்சவெளி, ஜயநகர் பிரதேசத்தில் 10 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய கேரள கஞ்சாவுடன் 3 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 3 கிலோ 548 கிராம் நிறையுடைய கேரள கஞ்சாவுடன் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வீடொன்றிலிருந்து கைப்பற்றப்பட்ட குறித்த கேரள கஞ்சா, விற்பனை நோக்கில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. குச்சவெளி பிரதேசத்தைச் சேர்ந்த 41 மற்றும் 49 வயதுகளையுடைய சந்தேகநபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக சட்டநடவடிக்கைகளுக்காக குறித்த சந்தேகநபர்கள், கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவுடன் குச்சவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என கடற்படையினர் தெரிவிக்கின்றனர்.

# மூதூர் சீதனவெளி பகுதியில் முன்பள்ளிக் கட்டடத்தில் தீ

மூதூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சேனையூர் கிராமசேவகர் பிரிவின் சீதனவெளிக் கிராமத்தில் உள்ள கலையுதயம் முள்பள்ளிக் கட்டடத்தில், கடந்த வெள்ளிக்கிழமை, மாலை 4 மணியளவில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

தீப்பரவலை அவதானித்த பொதுமக்கள் ஒன்றிணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தபோதிலும் தீப்பரவலால் முன்பள்ளிக் கட்டடம், கூரைப்பகுதி, தளபாடங்கள், மற்றும் சிறார்களின் கற்றல் உபகரணங்கள் என்பன சேதமடைந்துள்ளன.

தீப்பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் சீதனவெளிக் கிராமத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் மழைக்குரிய காலநிலை காணப்பட்டுள்ளது. பாரிய மழை பொழிவு இல்லாவிட்டாலும், சிறியளவிலான மின்னல் மற்றும் இடி முழக்கம் உணரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# ஊரடங்கு நேரத்தில் கடைகளில் வியாபாரம் ஆறு வர்த்தகர்கள் பொலிஸாரால் கைது


திருகோணமலை – கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஊரடங்கு நேரத்தில் கடைகளில் வியாபாரம் மேற்கொண்ட ஆறு பேரை நேற்று கைது செய்துள்ளோம் என கந்தளாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 30 ஆம் திகதி வரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் கந்தளாய், பேராறு, வட்டுக்கச்சி மற்றும் மத்ரஸா நகர் போன்ற பகுதிகளில் கடைகளைத் திறந்து இவர்கள் வியாபாரம் மேற்கொண்டுள்ளனர். இதன்போதே இவர்கள் பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர்.

சந்தேகநபர்கள் ஹோட்டல்கள், சில்லறைக் கடைகளைத்திறந்து வியாபாரம்செய்துள்ளனர்எனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மட்டக்களப்பு - களுவங்கேணி மாரியம்மன் ஆலய திருவிழாவில் கலந்து கொண்டவர்களுக்கு கொரோனா

மட்டக்களப்பு – களுவங்கேணி மாரியம்மன் ஆலய திருவிழாவில் கலந்து கொண்ட நிலையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் பெண் ஒருவரின் அம்மம்மா கொரோனாத் தொற்றால் நேற்று வீட்டில் உயிரிழந்துள்ளர் என பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.



வந்தாறுமூலை மேற்கு கிராம சேவகர் பிரிவில் மாரியம்மன் ஆலயத்துக்கு அண்மித்த பகுதியைச் சேர்ந்த 82 வயதுடைய பெண் ஒருவரே கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி வீட்டில் உயிரிழந்துள்ளார்.

## தம்பானம் வெளியில்

# யானை தாக்கி ஒருவர் சாவு

கரடியனாறு பொலிஸ்பிரிவுக்குட்பட்ட தம்பானம் வெளி பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் யானை தாக்கி இறந்த நிலையில் நபரொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது .

இவ்வாறு உயிரிழந்தவர் தம்பானம்வெளி பிரதேசத்தைச் சேர்ந்த ஜெயா என்ற மீன் வியாபாரத்தில் ஈடுபடும் 55 வயது மதிக்கத்தக்க நபரென அடையாளங்காணப்பட்டுள்ளது .

இப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது .

மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு






# ராஜஸ்தான் அணியிலிருந்து பட்லர் விலகல் நியூசிலாந்து வீரருக்கு கிடைத்தது வாய்ப்பு

*கொரோனாத் தொற்றுக் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட ஐ.பி.எல். 2021 தொடரின் இரண்டாம் பகுதியிலிருந்து விலகுகிறேன் என இங்கிலாந்தின் அதிரடித் துடுப்பாட்ட வீரரும் விக்கெட் காப்பாளருமான ஜோஸ் பட்லர் தெரிவித்துள்ளார். இந்த அணியில்இடம்பெற்றிருந்த பென் ஸ்டோக்ஸ் மனநலனைக் காரணம் காட்டி கிரிக்கெட் விளையாட்டில் இருந்து தற்காலிகமாக விலகியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.*

*இந்த இரு வீரர்களும் இல்லாதது ராஜஸ்தான் அணிக்குப் பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது.*

*இங்கிலாந்து கிரிக்கெட் சபை தங்கள் நாட்டு வீரர்கள் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்க அனுமதி அளித்துள்ள நிலையில் தனிப்பட்ட காரணங்களுக்காக விலகுகிறேன் என பட்லர் தெரிவித்துள்ளார்.*

*2018 சீசன் முதல் பட்லர் ராஜஸ்தான் அணிக்காக விளையாடி வருகிறார்.*

*அதன் மூலம் அந்த அணிக்காக ஐ.பி.எல். அரங்கில் மொத்தம் 1,441 ஓட்டங்களை அவர் எடுத்துள்ளார். பட்லருக்கு மாற்றாக நியூசிலாந்து அணியின் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான கிளென் பிலிப்ஸை ராஜஸ்தான் அணி ஒப்பந்தம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.*

*கிளென் பிலிப்ஸ் கரீபியன் பிரீமியர் லீக்கில் பார்படோஸ் ரோயல்ஸ் அணிக்காக விளையாடுவதோடு அண்மையில் நிறைவுபெற்றிருந்த இங்கிலாந்தின் ஹன்ட்ரட்ஸ் தொடரிலும் பங்கேற்றிருந்தார்.*

*கடந்த நவம்பரில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான ரி-20 போட்டியில் 46 பந்துகளில் சதமடித்து, நியூசிலாந்துக்காக வேகமான ரி-20 சதமடித்தவர் என்ற சாதனையை இவர் புரிந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.*







# பெங்களூரு அணியின் பயிற்சியாளர் மாற்றம் புதிய வீரர்களும் தெரிவு; நிர்வாகி தகவல்

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் மீதமுள்ள ஆட்டங்கள் தொடங்கவுள்ள நிலையில் பெங்களூரு அணியில் சில முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

கொரோனாவால் பாதியில் நிறுத்தப்பட்ட 14 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் எஞ்சிய 31 ஆட்டங்கள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள டுபாய், அபுதாபி, சார்ஜா ஆகிய நகரங்களில் அடுத்த மாதம் 19 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 15 வரை நடைபெறவுள்ளன.

இந்த நிலையில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் துணைத் தலைவர் ராஜேஷ் மேனன் இன்று காணொலி வாயிலாகச் ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசினார். அப்போது அணியில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து அவர் விவரித்தார்.

அதன்படி, பெங்களூரு அணியின் தலைமைப் பயிற்சியாளர் பொறுப்பிலிருந்து சைமன் கடிச் விலகியுள்ளார் என்றும் அணியின் கிரிக்கெட் செயல்பாடுகளுக்கான இயக்குநர் மைக் ஹெசன் தலைமைப் பயிற்சியாளர் பொறுப்பைக் கூடுதலாக வகிக்கவுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

அணியிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்றும் அதன்படி ஆஸ்திரேலிய சுழற்பந்துவீச்சாளர் அடம் ஸம்பா, டானியல் சாம்ஸ் ஆகியோருக்குப் பதிலாக இலங்கையின் வனிந்து ஹசரங்கவும் துஷ்மந்த சமீராவும் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பிஃன் அலெனுக்குப் பதில் டிம் டேவிட் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் அவர் கூறினார்.

# பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் புதிய தலைவராகிறார் ரமீஸ் ராஜா?

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவராக உள்ள இசான் மணியின் பதவிக் காலம் இந்த மாதத்துடன் முடிகிறது.

அவரது பதவிக் காலத்தை நீடிக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைமை அமைப்பாளரும் அந்த நாட்டின் பிரதமருமான இம்ரான் கான் விரும்பவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு புதிய தலைவர் நியமிக்கப்படவுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன. அடுத்த சில நாள்களில் தலைவர் பதவிக்கு இரு பெயர்களை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் அமைப்பாளரான இம்ரான் கான் அனுப்பி வைப்பார் எனவும், இதில் இருந்து ஒருவரை நிர்வாகிகள் தேர்வு செய்வார்கள் என்றும் எதிர்வுகூறப்படுகிறது.




இந்த நிலையில், பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும் வர்ணனையாளருமான 59 வயதான ரமீஸ் ராஜா அடுத்த தலைவராகுவதற்கு வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. முன்னாள் வீரர் ஒருவர் கிரிக்கெட் சபையை வழிநடத்துவதற்கு இதுவே சரியான தருணம் என்றும் எனவே அவரது பெயரை இம்ரான்கான் முன்மொழிந்திருக்கிறார் எனவும் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



# அமெரிக்க ஓபன் தொடரிலிருந்து ரபேல் நடாலும் விலகினார்

காயம் காரணமாக அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டித்தொடரிலிருந்து விலகுகிறேன் என ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் அறிவித்துள்ளார். பாதத்தில் ஏற்பட்டுள்ள காயத்துக்காக சிகிச்சை பெற, நடப்பு சீசனின் எஞ்சியுள்ள எந்தப் போட்டித்தொடரிலுமே தாம் விளையாடப்போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார். முன்னதாக, ஜூன் மாதம் நடைபெற்ற பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் தொடரின் அரையிறுதியில் சொபியாவின் நோவக் ஜோகோவிச்சிடம் தோல்விகண்டநடால், அதன்பிறகு விம்பிள்டனிலும், ஒலிம்பிக் போட்டியிலும் பங்கேற்காமல் தவிர்த்திருந்தார். தற்போது அமெரிக்க ஓபினில் இருந்தும் விலகியுள்ளார். கடந்த 2005 ஆம் ஆண்ட முதல் இந்தக் காயத்தால் தாம் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், கடந்த சீசன் முதலாக அதனால் மிகவும் அவதிப்பட்டு வருகிறேன் என நடால் தனது சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள வீடியோப் பதிவில் கூறியுள்ளார். காயத்திலிருந்து முழுமையாக மீண்டு தாம் களத்துக்குத் திரும்புவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஓபின் தொடர்களில் 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று சாதனை படைத்த 3 வீரர்களில் ஒருவராக ரோஜ பெடரர், நோவக் ஜோகோவிச் ஆகியோருடன் நடாலும் இருக்கிறார். ஏற்கெனவே காயம் காரணமாக பெடரரும் அமெரிக்க ஓபனில் இருந்து விலகிய நிலையில், தற்போது நடாலும் அந்தப் போட்டியிலிருந்து விலகியிருக்கிறார். இதன் மூலம் ஓபன் தொடர்களில் 21 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்ற முதல் வீரர் என்ற பெருமையை எட்டுவதற்கான வாய்ப்பு ஜோகோவிச் சிற்குக் கிடைத்திருக்கிறது. அமெரிக்க ஓபனில் சம்பியனாகும் பட்சத்தில் அவர் அந்தச் சாதனையைப் படைப்பார்.

# அதிபர் மற்றும் ஆசிரியர்கள் இணையவழியில் போராட்டம்





கல்வியின் இராணுவமய மாக்கலுக்கு எதிராகவும், ஊதிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் ஆசிரியர் அதிபர்கள் தொழிற்சங்க கூட்டணி இணைய வழிசைபர் எதிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.

கொவிட் தொற்றுக் காரணமாகப் பொது வெளியில் போராட்டங்கள் தடுக்கப்பட்டாலும், எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடரும் எனப் போராட்டத்தை ஆரம்பித்த நிலையில், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப்ஸ்டாலின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார்.

'இது போன்று எங்கள் நடவடிக்கைகள் முன்னோக்கி நகர்கின்றன. இந்தப் பிரச்சினையை இழுத்துக் கொண்டிருக்காமல் தீர்வைப் பெற்றுத்தருமாறு நாங்கள் அரசாங்கத்திடம் கேட்கின்றோம்' எனச் சிரேஷ்ட ஆசிரியர் சங்க செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களும் தங்களால் இயன்ற வரை இணையப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க கேட்டுக்கொண்டார்.

'கவிதைகள் எழுத முடியும், பாடல்களை எழுத முடியும், கவிதைகள், பாடல்களைப் பாட முடியும், கேலிச்சித்திரங்களை வரைய முடியும்.

உங்களால் முடிந்த எல்லா வழிகளிலும் இந்த எதிர்ப்பு போராட்டத்தில் இணையுங்கள்' ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பாக ஏனைய அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடி அவர்களின் ஆதரவைப் பெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஊதிய பற்றாக்குறை பிரச்சினையை முன்னிறுத்தி ஒரு மாதத்துக்கும் மேலாக வீதியில் போராட்டம் நடத்திய ஆசிரியர்கள் அதிபர்கள் தொழிற்சங்கக் கூட்டணி ஓகஸ்ட் 18ஆம் திகதி அமைச்சரவை உப குழுவைச் சந்தித்தது. சுபோதனி சம்பள அறிக்கையைத் தவிர வேறு ஏதேனும் முன்மொழிவுகள் காணப்படுகின்றனவா என அரசாங்க உபகுழு தொழிற்சங்கங்களைக் கேட்டிருந்தது.

அனைத்து ஆசிரியர் சங்கங்களின் தொழிற்சங்கங்களும் ஏகமனதாக சுபோதனி சம்பள முன்மொழிவைத் தவிர வேறு எந்த முன்மொழிவும் இல்லை எனவும், ஆசிரியர்களுக்காக அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட சுபோதனி சம்பள முன்மொழிவை அமுல்படுத்தவேண்டும் எனவும் கூறியிருந்தன.

இந்த விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானத்தை நாளை (திங்கட்கிழமை) இடம்பெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் அறிவிக்கவும், செவ்வாய்க்கிழமை நிதி அமைச்சுடன் கலந்துரையாடல் நடத்தவும் அமைச்சரவை உபகுழு ஒப்புக்கொண்டதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் ரவீந்திர ரணவீர தெரிவித்துள்ளார்.

## மதுவரித் திணைக்களம் திடீர் சோதனை 25 சாராயப் போத்தல்களுடன் ஒருவர் கைது!

### வவுனியாவில் சம்பவம்

மதுவரி திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது 25 சாராயப் போத்தல்களுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, கண்டி வீதியில் உள்ள பிரபல சுப்பர் மார்க்கற் முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

கொவிட் அச்சுறுத்தல் காரணமாக நாடுமுழுவதும் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10 மணி முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை முடக்கப்பட்டுள்ள நிலையில் மதுபானக் கொள்வனவு அதிகரித்து காணப்பட்டது. இந்நிலையில் வவுனியா, கண்டி வீதியில் உள்ள பிரபல சுப்பர் மார்க்கெற் ஒன்றுக்குச் சென்ற இருவர் 25 சாராயப் போத்தல்களைக் கொள்வனவு செய்துள்ளனர்.

குறித்த போத்தல்களை ஒருவருடைய மோட்டார் சைக்கிளில் வைத்து கொண்டு செல்ல முற்பட்ட போது அங்கு திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட மதுவரித் திணைக்கள அதிகாரிகள் 25 சாராயப் போத்தல்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த நபரைக் கைது செய்ததுடன், சாராயப் போத்தல்களையும் பறிமுதல் செய்தனர்.

குறித்த நபரிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ள மதுவரித் திணைக்கள அதிகாரிகள், மேற்படி நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.





## ஆப்கானிஸ்தான் தூதுவருக்கும் பிரதமருக்கும் இடையில் சந்திப்பு

ஆப்கானிஸ்தான் தூதுவர் அஷ்ரப் ஹைதாரிக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் அதிகாரத்தைக் கைப்பற்றியதன் பின்னரான நிலைமைகள் தொடர்பாகப் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இணைந்து கொண்டார்.

ஆப்கானிஸ்தானில் தற்போதைய சூழ்நிலைகள் தொடர்பாக இலங்கைக்கான அந்நாட்டுத் தூதுவர் பிரதமரிடம் விளக்கியுள்ளார். முன்னாள் பிரதமர் ஹமீட்கர்சாய் உள்ளிட்டவர்கள் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய விரிவான கூட்டணி ஒன்றை உருவாக்கும் நோக்கிலான பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆப்கானிஸ்தானில் பேண்தகு சமாதானத்தை நிலைநாட்டுவது தொடர்பாகப் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் மக்களுடன் பிரதமர் மஹிந்தவிற்கு காணப்படும் நட்புறவிற்காக நன்றி பாராட்டுவதாக தூதுவர் அஷ்ரப் ஹைதாரி தெரிவித்துள்ளார்.

## புகைப்பிடிப்பவர்களுக்கு கொவிட் தாக்கம் 14 மடங்கு அதிகமாம்!

புகைப்பிடிப்பவர்களுக்கு கொவிட் பெருந்தொற்றின் தாக்கம் புகைப்பிடிக்காதவர்களிலும் 14 மடங்கு அதிகம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் தலைவர் வைத்தியர் சமாதி ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

வீட்டிலோ அல்லது வெளியிடம் ஒன்றிலோ புகைப்பிடிப்பவர்களுடன் இருந்தால் கொவிட் தொற்று தாக்கும் சாத்தியம் அதிகமாகும். கொவிட் தொற்று ஏற்படக்கூடிய சாத்தியம் அதிகம் என்பது போன்றே அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களால் மரணம் நேரக்கூடிய சாத்தியமும் அதிகமாகும்.

தடுப்பூசி ஏற்றிக்கொண்டாலும் புகைப்பிடித்தல் மற்றும் மதுபானம் அருந்துதல் பழக்கமுடையவர் என்றால் தடுப்பூசி மூலம் உருவான நோய் எதிர்ப்பு சக்தி பலவீனமடையும் என வைத்தியர் சமாதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## 29 வயது இளைஞன் விபத்தில் பரிதாப சாவு

மாத்தளை மாவட்டத்தின் கலேவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹவெஹெர பிரதேசத்தில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மாத்தளையிலிருந்து கலேவெல நோக்கிப் பயணித்த மோட்டார்சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிச் சென்று மின்சாரத் தூண் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் கலேவெல பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். விபத்தில் படுகாயமடைந்த நபரை கலேவெல வைத்தியசாலையில் சேர்த்தபோதிலும் குறித்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது உயிரிழந்துள்ளார். இந்த நிலையில் பிரேத பரிசோதனைக்காக சடலம் கலேவெல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அலெக்ஸி நவால்னிக்கு விஷம் கொடுத்த விவகாரம்; ஏழு ரஷ்ய குடிமக்களுக்கு பிரித்தானியா தடை!

கிரெம்ளின் விமர்சகர் அலெக்ஸி நவால்னிக்கு விஷம் கொடுக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக, ஏழு ரஷ்ய குடிமக்களுக்கு பிரித்தானியா தடை விதித்துள்ளது.

இலக்கு வைக்கப்பட்ட ஏழு நபர்களும் ரஷ்ய கூட்டாட்சி பாதுகாப்பு சேவையின் உறுப்பினர்கள் ஆவர். இவர்களுக்கு சொத்து முடக்கம் மற்றும் பயணத் தடைகளை பிரித்தானியா விதித்துள்ளது.

அமெரிக்காவுடன் எடுக்கப்பட்ட தடைகள், தாக்குதலைத் திட்டமிடுவதற்கு அல்லது நடத்துவதற்கு நேரடியாகப் பொறுப்பானவர்களை இலக்காகக் கொண்டது என்று பிரித்தானியா வெளியுறவு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியுறவு செயலாளர் டொமினிக் ராப் கூறுகையில், 'ரஷ்ய அரசாங்கத்தின் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துவது சர்வதேச சட்டத்தை மீறுவதாக நாங்கள் தெளிவான செய்தியை அனுப்புகிறோம். மேலும் வெளிப்படையான குற்றவியல் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

'நோவிச்சோக்' நரம்பு இரசாயன நஞ்சு தொடர்பான முழுப் பங்கை அறிவிக்குமாறு நாங்கள் ரஷ்யாவை வலியுறுத்துகிறோம்' எனக் கூறினார்.

'நோவிச்சோக்' என்பது பனிப்போரின் போது சோவியத் ஒன்றிய ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட இரசாயன நஞ்சு ஆகும்.

இது தசைகளை முடக்குகின்றன மற்றும் மூச்சுத்திணறல் மூலம் மரணத்திற்கு வழிவகுக்கும்.

ஜனாதிபதி விளாடிமீர் புடினின் தீவிர விமர்சகரும், எதிர்கட்சித் தலைவருமான அலெக்ஸி நவால்னிக்கு கடந்த ஆண்டில் நோவிசோக் என்று இரசாயன நஞ்சு அளிக்கப்பட்டதால் கிட்டத்தட்ட இறக்கும் நிலைக்குச் சென்றார்.

இதன்பிறகு கடுமையான சிகிச்சைக்கு பிறகு மீண்ட நவால்னி, கடந்த பெப்ரவரி மாதம் ரஷ்யாவுக்கு திரும்பிய போது பழைய பண மோசடிக் குற்றச்சாட்டின்கீழ் கைது செய்யப்பட்டு இரண்டரை ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.






# அம்புலன்ஸ் அறக்கட்டளைகளுக்கு உதவ இராணுவத்தினர் வரவழைப்பு

இங்கிலாந்தில் உள்ள அம்புலன்ஸ் (மருத்துவ அவசர ஊர்தி) அறக்கட்டளைகளுக்கு உதவ இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி நான்கு அம்புலன்ஸ் அறக்கட்டளைகளுக்கு நோயாளிகளை கவனிப்பதற்காக ஏறக்குறைய 100 இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

அதிக தேவை மற்றும் ஊழியர் பற்றாக்குறை ஏற்படுமாயின் அவர்கள், தேசிய சுகாதார சேவை ஊழியர்களுடன் இணைந்து பணியாற்றுவார்கள். இங்கிலாந்தின் தெற்கு மத்திய, தென்மேற்கு, வட கிழக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் அம்புலன்ஸ் சேவைகள் இராணுவத்தால் முன்னெடுக்கப்படுகின்றன.

# கனேடிய பொதுத் தேர்தல் பகிரங்க விவாதம் செப்.8,9

கனடா கூட்டாட்சித் தேர்தல் செப்டெம்பர் 20ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் தேர்தலுக்கு முன்னரான நேரடி விவாதங்களில் கட்சித் தலைவர்கள் ஈடுபடவுள்ளனர்.

பிரெஞ்சு மொழி விவாதம் செப்டெம்பர் 8ஆம் திகதி இரவு 8 முதல் 10 மணி வரை இடம்பெறவுள்ளது. ஆங்கில மொழி விவாதம் செப்டெம்பர் 9 இரவு 9 மணி முதல் 11 மணி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சில அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டு விவாதத்தில் பங்கேற்கும் முன்னணி அரசியல் கட்சிகள் தேர்வு செய்யப்படும். இறுதியாக இடம்பெற்ற பொதுத் தேர்தலில் குறைந்தபட்சம் 4 வீத வாக்குகளைப் பெற்ற கட்சிகளே விவாதத்தில் பங்கேற்கதகுதிபெறும். அத்துடன், அக்கட்சிகள் குறைந்தபட்சம் ஒரு நாடாளுமன்ற உறுப்புரிமையாவது கொண்டிருக்க வேண்டும் என்பன உள்ளிட்ட அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டு விவாதத்தில் பங்கேற்கும் கட்சித் தலைவர்களை விவாத ஆணையம் தீர்மானிக்கும். இந்த அளவுகோல்களை பூர்த்தி செய்யாததால் கனடாவின் மக்கள் கட்சித் தலைவர் மாக்சிம் பெர்னியர் இம்முறை பொதுத் தேர்தலுக்கு முன்னரான பகிரங்க விவாதத்தில் பங்கேற்கமாட்டார் என விவாத ஆணையம் நேற்று சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் லிபரல், கன்சர்வேடிவ், என்.டி.பி., பிளாக் கியூபெகோயிஸ் மற்றும் பசுமைக் கட்சி ஆகிய 5 கட்சிகளில் தலைவர்கள் இம்முறை பகிரங்க விவாதத்தில் பங்கேற்கவுள்ளனர். விவாதத்தில் பங்கேற்பதற்கான அழைப்புக் கடிதங்கள் இந்தக் கட்சிகளின் தலைவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

இதுவரை என்.டி.பி. மற்றும் பசுமைக் கட்சி ஆகியன விவாதத்தில் பங்கேற்க ஒப்புதல் தெரிவித்து கடிதங்களை அனுப்பியுள்ளதாக ஆணையத்தின் இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த விவாதங்கள் முக்கிய கனேடிய ஊடகங்களில் நேரலையான ஒளி, ஒலிபரப்பு செய்யப்படவுள்ளது.

# உலக கொரோனா பாதிப்பு 21.21 கோடியாக உயர்வு




சீனாவின் வுகான் நகரில் 2019 ஆம் ஆண்டு கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது கொரோனா வைரஸ் 220 நாடுகள் பிரதேசங்களுக்கு பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. கொரோனாவை கட்டுப்படுத்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையிலும் வைரஸால் பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 21 கோடியே 21 லட்சத்து 2 ஆயிரத்து 151 ஆக அதிகரித்துள்ளது. வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் 1 கோடியே 79 லட்சத்து 33 ஆயிரத்து 37 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 18 கோடியே 97 லட்சத்து 33 ஆயிரத்து 602 பேர் குணமடைந்துள்ளனர். ஆனாலும், கொரோனா வைரஸால் உலகம் முழுவதும் இதுவரை 44 லட்சத்து 35 ஆயிரத்து 512 பேர் உயிரிழந்துள்ளனர்.



ஆப்கானில்

# வெளிநாட்டு துருப்புகளிடம் குழந்தைகள் ஒப்படைப்பு?

ஆப்கானிஸ்தான் காபூல் விமான நிலையத்தில் மேற்கத்திய இராணுவ வீரர்களிடம் பெற்றோர் இன்றி குழந்தைகள் மட்டும் ஒப்படைக்கப்படுகின்றார்களா என்ற சந்தேகத்துக்கு பிரித்தானிய பாதுகாப்பு செயலாளர் பென் வாலஸ் முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

கடந்த சில தினங்களாக வெளிநாட்டு துருப்புகளிடம் பெற்றோர் இன்றி சிறுமிகள் மட்டும் ஒப்படைக்கப்படும் காணொலிகள் சமூகவலைதளங்களில் வைரலாகி வருகின்றன.

இந்தநிலையில் இதுகுறித்து விளக்கம் அளித்துள்ள பிரித்தானிய பாதுகாப்பு செயலாளர் பென் வாலஸ், 'காபூல் விமான நிலையத்தில் சுவருக்கு அப்பால் உள்ள மேற்கத்திய இராணுவ வீரர்களிடம் குழந்தை ஒன்று ஒப்படைக்கப்படுவது போன்ற காட்சிகள் பதிவியாகியுள்ளன.

# தெந்கு சாண்ட்விச் தீவுகளில் கடுமையான நிலநடுக்கம்

தெற்கு அட்லாண்டிக் பெருங்கடல் பகுதியில் அமைந்த தெற்கு ஜார்ஜியா மற்றும் தெற்கு சாண்ட்விச் தீவுகள் பகுதியில் இன்று அதிகாலை 12.45 மணியளவில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது.

இது ரிக்டரில் 6.9 ஆக பதிவாகி உள்ளது. இந்நிலநடுக்கம் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது. இதனால் ஏற்பட்ட பொருளிழப்புகள் உள்ளிட்ட பிற விவரங்கள் எதுவும் உடனடியாக வெளியிடப்படவில்லை.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.08.2021இல் வெளியிடப்பெற்றது.